**C.O.S. No. 1/2025**
**Date : 12.03.2026**

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்)

PW 1 **திரு. ஜெயசந்திரன்**

**குறுக்கு விசாரணை :**

1. நான் கட்சியம்மாள் ஜெனரல் டிரேடிங் என்ற நிறுவனம் நடத்தி வருகிறேன். கடந்த 12 ஆண்டுகளாக மேற்கண்ட நிறுவனம் நடத்தி வருகிறோம். அது புரோபேரட்டர் நிறுவனம். பல வெளிநாடுகளில் இருந்து விதைகள், பழங்கள், கடல்பாசி போன்ற உணவுப் பொருட்களை இறக்குமதி செய்து இங்கு விற்பனை செய்து வருகிறேன். ஏற்றுமதி தொடர்பாக என்னிடம் லைசன்ஸ் இருந்தாலும் நான் ஏற்றுமதி செய்யவில்லை. எனது தொழில் பற்றிய விபரங்களை எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் ஆனால் ஏற்றுமதி செய்யவில்லை. எனக்கு வரவேண்டிய தொகைக்காக இந்த வழக்குகு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. பிரதிவாதிக்கு நான் சோயா விற்பனை செய்த வகையில் எனக்கு பணம் வர வேண்டியுள்ளது. அது தொடர்பாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் 12-ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன், கல்லூரி சென்றேன் ஆனால் பட்டம் முடிக்கவில்லை. எனக்கும், பிரதிவாதிக்கும் சுமார் 4 ஆண்டுகள் பழக்கம் உள்ளது. பிரதிவாதியை இதுவரை நான் நேரில் பார்த்தது கிடையாது. 2-3 முறை போனில் அவரிடம் பேசி இருக்கிறேன். நேரில் அவரை சந்தித்து பேசியது கிடையாது. பிரதிவாதியும் என்னை நேரில் வந்து பார்த்தது கிடையாது.

3. அவ்வாறு இருக்கும்போது எப்படி பிரதிவாதிக்கு சோயாபீன்ஸ் விற்பனை மேற்கொள்ளப்பட்டது என்றால் எனக்கும், அவருக்கும் ஏற்கனவே வர்த்தகம் இருந்து வந்தது அதன் அடிப்படையில் என்னை பிரதிவாதி நாடி வந்தபோது சோயா பீன்ஸ் விற்பனை செய்தோம். ஏற்கனவே பிரதிவாதிக்கும், எனக்கும் வர்த்தக தொடர்பு இருந்து வந்தது என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள்

ஏதேனும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்து உள்ளேனா என்றால் அது பற்றி ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அது இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை.

4. பிரதிவாதி சம்பந்தமாக நபர் ஒருவர் என்னை வந்து எனது அலுவலகத்தில் சந்தித்தார், அவர் பெயர் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை, அது பற்றி விபரங்கள் நான் பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடன் யார், யார் வர்த்தகத்தில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது தொடர்பாக நான் பதிவேடு எதுவும் பராமரித்து வருகிறேன் என்றால் அவ்வாறு பராமரிக்கவில்லை. சட்டத்திற்கு உட்பட்டு தான் நான் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

5. யார், யார் என்னிடம் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தார்கள் என்பது தொடர்பான பதிவுகள் எதுவும் நான் பராமரிப்பது கிடையாது. ரூ.96 லட்சத்திற்கு என்னிடம் வர்த்தகத்தில் பிரதிவாதி ஈடுபட்டார் என்று சொல்லும் நான் அது தொடர்பாக யார் என்னை வந்து என்றைக்கு சந்தித்தார் என்பது குறித்த விபரங்களை நான் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். அவ்வாறு தொடர்பு கொண்ட நபர் எப்படி இருப்பார் என்று என்னால் அடையாளம் சொல்ல முடியும்.

6. சோயா பீன்ஸை நான் கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து வாங்கினேன். அவரது நிறுவனத்தின் பெயர் பெனான்ஸ் இன்டர்நேஷனல் லிமிடெட் நைஜீரியாவில் இருந்து இந்த சோயா பீன்ஸ் இறக்குமதி செய்யப்பட்டது. இறக்குமதி தொடர்பான ஆவணங்கள் இருக்கும். இந்த இறக்குமதி செய்யப்பட்ட தொடர்பான ஆவணங்கள் என் வசம் இருக்கும் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரிதான்.

7. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்ட ஒப்பந்த ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒப்பந்தம் எதுவும் கிடையாது. கம்ப்யூட்டர் மூலம் ஜெனரேட் செய்யப்பட்ட பில்ஸ்

மூலமாக இந்த வரவு செலவு நடைபெற்று உள்ளது. வாய்மொழியான ஒப்பந்தம் ஏற்பட்டது என்ற விபரத்தை எனது பிராதில் நான் குறிப்பிட்டுள்ளேன். பிரதிவாதியின் நபர் ஒருவர் என்னை வந்து அணுகினார், அவர் பெயர் தற்போது என்னால் சொல்ல முடியாது அவர் மூலமாக நான் பிரதிவாதியான ஜெகதீஷ் போஷ்சுவானிடம் தொலைபேசியில் பேசி இந்த ஒப்பந்தம் முடிக்கப்பட்டது.

8. 14/3/2023 ம் தேதியன்று மேற்கண்ட வாய்மொழி ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டோம். பிரதிவாதியின் நிறுவனம் ஒரு தனி நபர் கம்பெனி.எனக்கும் பிரதிவாதியான ஜெகதீஷ் போஷ்சுவாணிக்கும் போன் மூலம் வர்த்தக உடன்படிக்கை அவர் அனுப்பிய நபர் மூலம் ஏற்படுத்திக் கொண்டோம். அது சம்பந்தப்பட்ட கால் லிஸ்ட் எதுவும் இந்த வழக்கில் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. நான் கூறுவது பொய் என்றும், 14.03.2023 ம் தேதியன்று பிரதிவாதி தரப்பில் எந்த நபரும் வந்து என்னிடம் நேரடியாக சந்திக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு பிரதிவாதியிடமிருந்து வந்த ரெப்ரசென்டேட்டிவ் போன் நம்பர் தற்போது என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. பிரதிவாதியின் நபர் வடக்கு மாநிலத்திலிருந்து வந்தார், அவருக்கு இந்தி, தமிழ், ஆங்கிலம் தெரியும். ரூ.96 லட்சத்திற்கு சோயா பீன்ஸ் அனுப்பியது தொடர்பான எழுத்துப்பூர்வமான ஒப்பந்தம் எதுவும் கிடையாது என்றால் சரிதான்.

10. ரூ.33 லட்சம் பாக்கி தொகையை 10 – நாட்களில் கொடுப்பதாக பிரதிவாதி சொல்லியிருந்தார் என்று எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு பாக்கித் தொகையைத் பிரதிவாதி கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. பிரதிவாதியுடன் தொடர்ந்து எனக்கு ஒப்பந்த பரிவர்த்தனை இருந்து வந்த காரணத்தினால் அவர் பாக்கி தொகை செலுத்தாமல் இருந்தும், இது சம்பந்தமாக உடனே நடவடிக்கை எடுக்கவில்லை.

11. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலம் நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள்

அனைத்தும் எனக்குத் தெரியும். ஒரு வருடம் காலம் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்ததற்கான காரணம் என்ன என்றால் பிரதிவாதியுடன் பிற பரிவர்த்தனை ஏற்படும் போது கூட இந்தப் பண வரவு செலவுகளை நேர் செய்யலாம் என்று காத்திருந்தேன். ஆனால் அதன் பிறகு அவ்வாறு வரவு செலவுகள் எதுவும் ஏற்படவில்லை என்ற காரணத்தினால் ஒரு வருடம் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கிற்கு முன்பு எனக்கும், பிரதிவாதிக்கும் வேறு வர்த்தக தொடர்புகள் இருந்தது. நான் கூறுவது போல் பிரதிவாதியுடன் எனக்கு வர்த்தக தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

12. அது சம்பந்தப்பட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத பட்சத்தில் வழக்குக்காக வேண்டுமென்றே வர்த்தக தொடர்பு இருந்ததாக பொய்யாக குறிப்பிடுகிறேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த வா.த.சா.ஆ.2 நான் வழங்கியது, இதுதான் இன்வாய்ஸ். மேற்கண்ட இன்வாய்ஸ்யில் பிரதிவாதி கையெழுத்து இட வில்லை என்றால் சரிதான். இது கம்ப்யூட்டர் மூலம் ஜெனரேட் செய்யப்பட்ட நகல். எனது நிறுவனத்தில் இருந்து பிரிண்ட் அவுட் எடுக்கப்பட்டது.

13. நானே ஜெனரேட் செய்து கொண்டேன் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு இந்த ஆவணம் அனுப்பியது தொடர்பான ஆவணம் எதுவும் வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவரது முகவர் இந்த ஆவணத்தின் நகலை வாங்கிச் சென்றார். அவ்வாறு வாங்கிச் சென்றது தொடர்பான கையெழுத்துக்கள் எதுவும் அவரிடம் வாங்கவில்லை என்றால் சரிதான். கம்ப்யூட்டர் ஜெனரேட்டர் நகல் என்பதால் அது சம்பந்தமான டெலிவரி ப்ரூப் எதுவும் நான் வைத்துக் கொள்வது கிடையாது.

14. இந்த வழக்குக்காக இந்த ஆவணம் என்னால் ஏற்பட்டதென்றும் இதன் அடிப்படையில் பரிவர்த்தனை ஏதும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. பிராதிலோ, பிராதிலோ நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தில் தூத்துக்குடியில் எங்கிருந்து இந்த சோயா பீன்ஸ் இறக்குமதி செய்யப்பட்டது

என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். டெலிவரி எங்கிருந்து எடுக்கப்பட்டது என்பது தொடர்பான விபரங்கள் இன்வாய்ஸில் குறிப்பிடப்பட்டுள்ளது.

15. எனக்கும், பிரதிவாதிக்கும் எந்த விதமான நேரடியான வர்த்தகத் தொடர்பு கிடையாது என்றும், நான் கூறுவது போல் எதுவும் பிரதிவாதி என்னிடம் சோயா பீன்ஸ் வாங்கவில்லை என்றும், எனக்கும், கிருஷ்ணமூர்த்திக்கும் மட்டுமே தொடர்பு இருந்தது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வா.த.சா.ஆ.3. –ல் போஷ்வானி அக்கவுண்டில் இருந்து எனது அக்கவுண்டிற்கு பணம் வந்ததை காட்டக்கூடிய நான் வழங்கிய ரசீது.

16. நான் பிரதிவாதி நிறுவனத்திற்கு மேற்கண்ட ரசீதை அவரது முகவர் மூலமாக வழங்கினேன். இது சம்பந்தமாக கையெழுத்து எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். தற்போது வர்த்தக தொடர்புகள் அனைத்தும் கம்ப்யூட்டர் மூலம் நடைபெற்று வருவதால் இது சம்பந்தமாக எழுத்துப்பூர்வமாக ஆவணங்கள் எதுவும் எங்கள் அலுவலகத்தில் பராமரிப்பது கிடையாது, கையெழுத்தும் அவ்வாறு வாங்குவது கிடையாது.

17. பிரதிவாதி நிறுவனத்துடன் ரூ.96,43,567/–க்கு சோயா பீன்ஸ் என்னிடம் வாங்கி கொள்வதாக பிரதிவாதி ஒப்பந்தம் எதுவும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை என்றால் சரிதான், இன்வாய்ஸ் மூலம் தான் பரிவர்த்தனை நடந்தது. இன்வாய்ஸ் மேற்கண்ட தொகைக்கு பிரதிவாதி ஒப்புக்கொண்டதாக குறிப்பு ஏதும் இல்லை என்றால் சரிதான். அது கம்ப்யூட்டர் ஜெனரேட்டர் இன்வாய்ஸ். நான் தாக்கல் செய்த வா.த.சா.ஆ.9 மற்றும் 10 வங்கி கணக்கு பட்டியலில் ரூ.96 லட்சம் தர வேண்டும் என பிரதிவாதி குறிப்பிடவில்லை என்றால் எனது வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்துள்ளேன்.

18. நான் ரூ.96 லட்சம் பெருமானமுள்ள சரக்குகளை பிரதிவாதி நிறுவனத்திற்கு அனுப்பிய தொடர்பான ஆவணங்கள் எதையும் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் இதுனால் வரை தாக்கல் செய்யவில்லை.

வேண்டுமென்றால் ஈவே பில்களை என்னால் தாக்கல் செய்ய முடியும். எனவே எனது கோரிக்கை முறையான கோரிக்கை இல்லை என்றும், வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எதன் அடிப்படையில் 12 சதவீதம் வட்டி கோரி உள்ளேன் என்றால் சாதாரண வர்த்தக தொடர்பில் 12 சதவீதம் தர வேண்டும் என்ற அடிப்படையில் கேட்டுள்ளேன்.

19. ஒப்பந்தம் இல்லாத சமயத்தில் அவ்வாறு வட்டி கேட்க முடியாது என்ற விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, ஏற்கனவே நடைபெற்ற வர்த்தக வியாபாரத்தின் அடிப்படையில் இந்த வட்டி கோரியுள்ளேன். வட்டி தொடர்பான ஒப்பந்தம் எதுவும் பிரதிவாதியுடன் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை வேண்டுமென்றே பொய்யாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

20. நான் இறக்குமதி வர்த்தகம் செய்வதை காட்டக்கூடிய லைசென்ஸ் எதுவும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் பெயரில் அந்த லைசென்ஸ் உள்ளது. எனக்கும், பிரதிவாதிக்கும் நேரடியாக எந்த வர்த்தக தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. கிருஷ்ணமூர்த்தியை இந்த வழக்கில் சேர்க்காத பட்சத்தில் அதன் அடிப்படையில் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.03.12 18:22:31 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

தேனி.